4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை = 600 104.

நாள்.02.07.2025
எம்.சி.ஓ.பி எண்.3096/2022
ம.சா.1
பெயர். பாலு
த/பெ.திரு. கணேசன்
வயது.25

**2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் தான் கொடுத்தேன். என்னை TN 75 Ae4262 என்ற இருசக்கர வாகனம் தான் என்னை இடித்து விபத்து ஏற்படுத்தியது. நானும் எனது நண்பரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். மசாஆ2 பதிவு சான்றிதழ் விவரம் என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் சட்டத்திற்கு உட்ப்பட்ட ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அது இணையத்திலிருந்த பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் இருசக்கர வாகனத்திற் 19.01.2022 முதல் 18.01.2023 வரையிலான காலத்திற்கு உட்பட்ட பாலிசி என்று சொன்னல் சரிதான். மசாஆ 5 ஆவணம் மசாஆ3 வழக்கறிஞர் அறிவிப்பின் பெயரில் காப்பீடு நிறுவனம் எனக்கு அனுப்பிய பாலிசி என்றால் சரிதான். மசாஆ 2 ஆக தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள தேதி 18.01.2023 வரை மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாலிசி எந்த தேதியில் அரம்பிக்கப்பட்டுள்ளது என்று இல்லை என்றால் சரிதான். எந்த வித ஆவண குறிப்பும் இல்லாமல் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட சங்கதிகள் உண்மை இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த தேதி 23.12.2021 ஆகும். அந்த தேதியில் 2ம் எதிர்மனுதாரரிடம் மனுதாருக்கு காப்பீட்டே கிடையாது என்றும் 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூல்ததில் உள்ள 3ம் பக்கத்தில் 5 வருட காப்பீடு கண்டிப்பாக கொடுக்கவேண்டும் என்று சட்டம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் இருசக்கர வாகனம் 2018 பதிவு செய்யப்பட்ட வாகனம் என்றும் Bundle policy எடுப்பது அது வாகன உரிமையாளரின் விருப்பத்தின் பெயரில் உள்ள காப்பீடு என்பதால் 3ம் பக்கத்தில் உள்ள சங்கதிகள் சட்டத்திற்கு முரணானது என்றும் அது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீடு மிக

அதிகம் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.